உ
சிவமயம்

# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

# HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது
பிரதி விலை : சதம் 20.

ஆரம்பம விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம உ   அச்சகம: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத் - கூ0 ]   யாழ்ப்பாணம்:-   காலயுத்தி ஞு   வைகாசி மீ கூ௨ - உ   வெள்ளிக்கிழமை ( 26 - 5 - 1978 )   [ இல - கூ

## இசைப் பணியில் இராமநாதன் கல்லூரி

### எடுத்துக்காட்டாக இலங்குபவர் செல்வி சிவசக்தி சிவப்பிரகாசபிள்ளை

நாளை மறுநாள் நடைபெற இருக்கும் இராமநாதன் கல்லூரிப் பெற்றூர் ஆசிரிய சங்க நிகழ்ச்சியான இசை விருந்தைப்பற்றி எழுதலாம் என்று எண்ணினேம். ஊன்றி யோசிக்குமிடத்து இன்று திருஞான சம்பந்தர் குருபூசைப் பெருநாள். சம்பந்த சுவாமிகள் என்றவுடன் பண்ணிசையைப்பற்றியே எண்ணும் எழுவது இயல்பு. கற்றுவின் மனம் போலக் கசிந்துருகிப் பெற்றுள் போன்று சிவகாமசுந்தரியம்மையார் கவுணியர்க்கு பால் சுரக்க அவ்வமுதைப் பருகிய பாலன் முத்தமிழ் ஞானத்தை உட்கொண்டான் என்ற உண்மையும் உள்ளத்தில் உதயமானது. இயற்புலவராய் இசைப் புலவராய் ஞான நாடகப் புலவராய் இலகொளி பரப்பிய குரவர் தந்த இசைப்பயனே மக்களை ஈடேற்ற வல்லதென்று உலகறிந்துவிட்டது. எவ்வாறெனின் பண்ணிசைப் பயிற்சி பல்கலைத் தரத்ததாய் விளங்குகின்ற தன்மையினுல்.

இந்தப் பாயிரம் இக் கட்டுரைக்கு இன்றியமையாததாகின்றது என்னை. செல்வி சிவ சக்தியும் இசைக் கல்விச் செல்வியாக இறை வழிபாட்டுக்கு வழி வகுக்கின்றூர் என்பதனுலே.

திருமுறைகளிலே குரவர்கள் வண்டினத்தையும் கிள்ளை, குயில், புள்ளினத்தையும் வைத்து அவற்றின் இன்னிசையை வியந்து அவ்வழி தெய்வத்தைப் பண்ணமைத்துப் பாடிப் பேரின்பம் தேடின இடங்களை இங்கே நாட வேண்டியிருக்கின்றது.

இனிதாக மொழியும் எழில் இளங்குயிலே
   வண்டு பண முரலும் சோலைத்
தீக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி
சேருடு செங்கமுநீத தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேருய உருவாகிச் செவ்வழிநற் பணபாடும்
குழலின் இசை வண்டினிசை கண்டு குயில் கூவும்
நிழலின் எழில தாழ்ந்த பொழில சூழ்ந்த நின்றியூரே.

இவ்வாறெல்லாம் ஆளுடைய பிள்ளையார் இசையை ஆளும் பிள்ளையாய் இறைவனை ஏத்தி முத்தியடைந்தார் என்று முதலாம் இரண்டாம் மூன்றுந் திருமுறைகளிலே காண்கின்றோம்.

ஏனைய குரவர்களும் இச்சால்புமான ஏழிசைப் பயனை எடுத்தோதியவண்ணம் திருமுறை பாடினர் என்பதை யாவருமறிவர்.

செல்வி சிவசக்திக்கு இசையின் சக்தி இயல்பாய் அமைந்திருக்கின்றதென்பதை இந்த இசை இளவரசி இதுவரை சென்னையிற், சிங்கை நகரிற், கோலாலம்பூரில், ஈழவளநாட்டில் அமைந்த சங்கீதத் திறமை புலப்படுத்துகின்றது.

இசைக்கு அரங்கு ஒரு இன்றியமையாத அம்சம், இராமநாதன் கல்லூரி அரங்காகச் செல்வி சிவசக்தி நடனம், பாட்டு நிகழ்ச்சிகளைச் சித்தியுடன் நடத்தியுள்ளனர், நிரம்பிய நூலறிவும பயிற்சி அனுபவமும்

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

### நீராவி வீரகத்தி விநாயகர் அலங்காரத் திருவிழா

சைவத்தின் பழம்பெரும் பதியாகிய வண்ணர்பண்ணையில் உள்ள நீராவியடியில், இருபாலை சேனாதிராச முதலியார் அவர்களாலும் பாடப்பெற்றபெருமை உடைய மேற்படி ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா வருகிற திங்கட்கிழமை 29-5-78 வைகாசி மாதத்துச் சதய நட்சத்திரத்திலன்று சங்காபிடேகத்துடன் ஆரம்பமாகின்றது. அன்று இரவு மணவாளக்கோல விழா நடைபெறும். தொடர்ந்து 10 நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெறும். தினமும் பகலில் ஸ்நபன அபிடேகமும் விசேட பூசையும் நடைபெறும். இரவில் விசேட அபிடேக ஆராதனைகளுடன் சுவாமி வீதி வலம் வருதலும் வழமைபோற் சிறப்பாக நிகழும்.

பத்து நாட்கள் அலங்காரத் திருவிழாவையடுத்து கைவரவர் மடையும் அடுத்த நாள் சதுர்த்தி தின விழாவும் சிறப்பாக நடைபெறுமென திருமதி செல்லம்மா வைத்தியலிங்கம் அறியத் தருகின்றூர்கள்.

### முதலாந் தீட்சை

சைவ அநாதர் இல்லம் கைதடியில் 3-6-78 சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் (நாளை) சிவக்கருலூலர் திரு. இ. அரசரத்தினம் அவர்கள் தலைமையில் சைவப் பிரவேச தீட்சை வைபவம் நிகழும். அன்று பல சைவ அறிஞர்கள் உரை நிகழ்த்துவர்.

### திருவைந்தெழுத்து எழுதும் போட்டி

மாலை சிவத் தமிழ்ச் செல்வர் திரு க. கனகராசா அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்று பிற்பகல் 12-05 மணி முதல் திருவைந்தெழுத்து எழுதும் போட்டி ஷ இல்லத்தில் நிகழும். ஐந்து வயதிடங்கள் மட்டும நிகழும் இப் போட்டியில் சைவப் பிரவேச தீட்சைபெற்றோர் யாவரும் பங்கு பற்றலாம். 2 6-78 ன் முன் பெயர், விலாசம, பங்கு பற்றும் பிரிவு ஆகிய விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். பிரவேசகட்டணம் எதுவும் இல்லை. பதினொந்து வயதுக்குட்பட்டோர் கீழ்ப் பிரிவிலும், இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள் மத்திய பிரிவிலும் அதற்கு மேற்பட்டவர்கள் மேற்பிரிவிலும் பங்கு கொள்ளலாம். பரிசு அன்று மாலை ஆங்கு வழங்கப்பெறும் என்று அநாதர் இல்லச் செயலாளர் அறிவிக்கின்றனர்.

கவிஞர் சிகாமணி பிரம்மஸ்ரீ கா. அப்பாச்சாமி ஐயர் அவர்கள் இயற்றிய

## நகுலகிரிப்புராண மூலமும்

இளைப்பாறிய தலைமையாசிரியர்
திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய

## உரையும்

### அணிந்துரை

(அமரர்) [ வித்துவான் ந. சுப்பையபிள்ளை ]

இவ்விலங்கையின் வடபாலில், கீரிமலை என்ற தலமும், கீரிமலைச் சிவன் கோயில் என வழங்கும் நகுலேசுவராலயமும் அதனருகில் மலைப்பாறையொன்றின் குகையிலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் பாதாள கங்கைத் தீர்த்தமும் உள்ளன. மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற இம்மூன்றன் மகிமைகளை விளக்கும் நகுலகிரிப் புராணம் என்ற தமிழ்நூலொன்று விருத்தச் செய்யுள் வடிவிலமைந்த சிறு காப்பியமாக அச்சிட்டு வெளிவந்துள்ளது. அதனை இயற்றியவர் திரு. கா. அப்பாசாமி ஐயர் என்று 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்ற நூலிலே பிற் சேர்க்கைப் பகுதியிற் காணப்படுகின்றது. அப் புலவருடைய வரலாற்றுக் குறிப்பு அறியப்படாமையினுற் போலும் அக்களஞ்சிய நூலிற் குறிக்கப்படவில்லை,

நகுலகிரிப்புராணம், அச் சிவாலயத்திலே சோமவாரந்தோறும் நடைபெறும் ஏனைய புராண படன வரிசையில வைத்துப் படித்துப் பொருள் விரிக்கப்பட்டு வருவதாயுள்ளது. அப் படனங்களிற் பங்கு பற்றி அறிஞர்களின் படனவுரைகளைக் கேட்டும் தாமும் அவற்றைச் செய்தும் பயிற்சி முதிர்ந்த விழிசிட்டியிலுள்ள சிவபக்திமானுகிய திரு செ, சிவசுப்பிரமணியம் என்ற இளைப்பாறிய தலைமையாசிரியர் இப்புராணத்துக்கு ஒருரை இயற்றி நிறைவேற்றியுள்ளார்; அதனைச் சில பண்டிதர்களும் பார்வையிட்டு அணிந்துரை வழங்கியுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

குறித்தவுரையாசிரியர், இவ்வுரையைப் பார்வையிடும்படியும் ஒரு முகவுரை வழங்கும்படியும் என்னை வேண்டியமையாற் பார்வையிடலாயினேன். இவ்வுரையானது மூலத்திலுள்ள பதங்களுக்குப் பிரதி பதப் பொருளாக அமையப் பதவுரையும் அவசியப்பட்ட இடங்களில் விசேடவுரையும் தந்து இயலுகின்றது. இவ்வாசிரியர் உலகிற்குச் செய்த இவ்வுரை நூலாக்கத் தொண்டுக்குத் தமிழுலகம் நன்றி மறவாக் கடப்பாடுடையதாகும்,

இவ்வுரையாசிரியராகிய திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள இதுபோல உலகிற்கு உபயோககரமான மற்றும் புண்ணிய கைங்கரியங்களைச் செய்து நீண்ட ஆயுள ஆரோக்கிய ஐசுவரியாதிகளைப் பெற்று இனிது வாழும்படி மாதுபங்கராகிய நகுலேசுவரப் பெருமானை வாழ்த்தி வணங்கி வேண்டுகின்றோம்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ வைகாசி மீ கஉ-உ வெள்ளி


## புராண படனப் பயிற்சிப் போதனையைச் சாதனைசெய்தல்

பழம் பண்பாக வாழ் நாட்டில் நாவலர் நற்றலைவார் காட்டிய வழியில் ஆங்காங்கு நியமமாகப் புராண படனம் நடைபெற்று வருகின்றது. ஆனல் இந்த ஆத்ம ஞானப் பயிற்சியிற் பங்குகொள்பவர்கள் மிகச் சிலரே. புராணத்தை வாசிப்பவர்களும் விரிவுரை பகர்பவர்களும் குறிக்கப்பட்டவர்களாயே இருப்பது இந்த அரிய நியமம், தொடர்ந்து பிற்காலத்திலும் வழங்குவதற்கு வழி வகுக்கவில்லையே என்பதைக் காட்டுகின்றது.

சைவ சமய அறிவுத் தேர்வுகளும் திருமுறைப் பண்ணிசைப் பரீட்சைகளும் நிகழ்வதனல் அநேக மாணுக்கர்கள் நல்ல பணியில் ஈடுபடத்தக்கவராயிருப்பதுபோலப் புராணபடனப் பயிற்சிக்கும் ஒரு ஒழுங்கு செய்யப்படுதல் அவசியம் வேண்டப்படுகின்றது.

படனத்துக்குரிய திருத்தொண்டர் புராணம் கந்த புராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகிய இவற்றை வைத்துத் தேர்வொன்றினைத் திட்டமிடுதல் நன்று.

நாவலர் நன் மரபு வழி புராண ஆசிரியராகத் திகழ்கின்ற இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் ஆலோசனையைப் பெற்று இந்தப் பரீட்சையை நிகழ்த்தச் சைவபரிபாலன சபை போன்ற அற நிலையங்கள் முற்படுதல் வேண்டும்.

திருக்கோயில்களில் அமைந்திருக்கும் ஆதீனங்களும் இப் புண்ணிய கைங்கரியத்தைச் செயற்படுத்த ஆவன செய்தல் வேண்டும்.

நாவலர் ஐயாவின் பதிப்பாகவுள்ள புராணங்கள் மீண்டும் அச்சேற்றப்படுதலும் அத்தியாவசியம். எழுத்துப் பிழையறக் கற்பதற்கு புனித பதிப்புக்களே தேவை.

இந்த எண்ணத்தைச் சைவ சமயிகள் ஏற்று வேண்டிய ஒழுங்குகளைச் செய்வார்களாக.

## இசைப் பணியில் இராமநாதன்

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

அரங்கமைப்பும் ஒருங்கு சேர்ந்து செல்வி சிவசக்தியை இசை உருவமாக்குதல் இராமநாதன கல்லூரிக்கும் பழைய மாணுக்கர்களுக்கும், பெற்றேர் ஆசிரிய சங்கத்துக்கும்பெருமைக்குரியது. இந்த இசைமழலைக்குழவியை ஈன்றெடுத்த தவத்தினர் திரு. சிவப்பிரகாசபிள்ளையும் திருமதி அங்கயற்கண்ணியும். அவ்வருமருந்தன்னவளை அந்த வழியிலே அணிபெற வைப்பது பெற்றேர் பிள்ளைக்கு ஆற்றும் பெரும் பணியாமன்றே.

### இந் நிகழ்ச்சி இனிது எய்தியது

இன்று இராமநாதன் கல்லூரியில் இந்த இசை விருந்து மிகச்சிறப்பாக நிகழ்ந்தது. பிரபல வர்த்தகத் திருவாளர் சின்னத்துரை தலைமைதாங்கிய இந்நிகழ்ச்சியைப் பன்னூற்றுக் கணக்கானேர் இரசித்தனர்.

கல்லூரி அதிபர் திருமதி இ. அருணுசலம் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. நம. சிவப்பிரகாசம் பாராட்டுரை வழங்கினர். உடுவிற் கிராமச் சங்கத்தில் முன்னணியில் தலைவரான திரு. ச. முத்துலிங்கம் குறிப்புரை கூறினர். திருமதி சரோஜினி சுந்தரேசன் நன்றி நவின்றனர்.

## விஷ மருத்துவமும் பரிகரிப்பு முறைகளும்


வைத்தியகலாநிதி இ. கனகலிங்கம்
ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர், மயிலிட்டிக் கிராமசபை.


[ அ: இ. உ. மன்ற சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்க மலர் வெளியீடு. நாளை மறுநாள் நிகழ இருக்கும் மலர் வெளியீட்டில் இடம்பெறும் கட்டுரையில் ஒன்று இங்கே தருவிக்கப்படுகின்றது. ப—ர்]

எமது நாட்டின் சுவாத்தியம், உணவு, பண்பாடு என்வற்றை ஒப்புநோக்கிச் சித்த ஆயுர்வேதமுறைப்படி செய்யப்படும் விஷகடிகளுக்கான சிகிச்சை முறைகளை மேனட்டு வைத்தியத்துடன் ஒப்புநோக்குதல் அவசியமாகும். சுதேச முறைப்படி செய்யப்படும் சிகிச்சைகளானது நமது நாட்டில் விஞ்ஞானரீதியில் இன்றுவரை நன்கு ஆராயப்படாமலும் புதிய முறைகளைப் புகுத்தாமலும் பின்தங்கிய நிலையிலிருப்பது கவலைக்குரியவிடயமாகும். சுதேச வைத்தியத்திற்குத் தகுந்த இடமளித்துவரும் இன்றைய அரசாங்கம் விஷ மருத்துவத்துறையையும் விருத்தி செய்ய ஆவன செய்யுமென எதிர்பார்க்கின்றோம்.

விஷங்கள் தாவரவிஷம், தாதுவிஷம், ஜீவவிஷம் என மூன்று பிரிவுகளுள் அடங்கும். இவற்றுள்,

1. தாவரவிஷம்: எப்பொருள்களும், நச்சுத் தன்மையோ, அமிர்தத்தன்மையோ உடையன அல்ல என்றும், அவற்றை உட்கொள்ளும் அளவையும், அவற்றின் தூய்மைத் தன்மை என்பவற்றையும் பொறுத்தே நற்குணம், தீயகுணம் அமையும் எனவும் சில நூல்கள் கூறுகின்றன. ஆனல் அளவை அனுசரியாமலும், தூய்மைப்படுத்தாமலும் சில உணவுகளை நாம் உட்கொண்டபோது அவை எம்மைத் துன்புறுத்தவில்லையே. உதாரணமாக பழவகைகள், விதைகள், கிழங்கு வகைகள், இலைவகைகள், பூவகைகள் முதலானவைகளாம். ஆதலினல் மருந்துக்கேனும், உணவுக்கேனும் நஞ்சுள்ளவை எவை; நஞ்சற்றவை எவை என நன்கு அறிந்து உபயோகத்திற்கு எடுத்தல் வேண்டும். இவைகளைப் பாகம்பண்ணும் முறைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

தற்செயலாகவோ, பிறராலோ நச்சுத் தன்மையான தாவரவிஷம் மனிதனின் உள்ளுறுப்புக்களைச் சேர்ந்தால் அதனல் மரணம் வரையிலான பெரும் துன்பத்தை அனுபவிப்பான். எனவே அவ்வத் தாவரங்களை உட்கொண்டதன் அறிகுறி, குணங்குறிகளை, இன்னதென அறிந்து அவற்றிற்குரிய விஷமாற்றுக்கான திரவியங்களையோ பாகம் செய்யப்பட்ட மருந்துகளையோ உரிய முறைப்படி கொடுத்துச் சிகிச்சை செய்யவேண்டும். உதாரணம்: நெல்வேர், நேர்வாளம், ஆடுதின்னப்பாலை, பாலாடை, காஞ்சொறி, பேய்ச்சுரை, மரவள்ளிக்கிழங்கு முதலியனவாம்.

2. தாதுவிஷம்: இரசங்கள், பாஷாணங்கள், உப்புக்கள், இரத்தினங்கள், போன்ற தாதுப்பொருட்கள் ஏற்றத்தாழ்வான சேர்க்கையாலோ, விஷமித்துக் காணப்பட்ட நிலையிலோ உட்கொள்ளப்படுமிடத்து உயிர்த்தாதுக்கள், உடல் தாதுக்கள் பாதிக்கப்பட்டு மனிதனுக்கு துன்பத்தை விளைவிக்கும். இதற்குத் தாவர விஷத்தன்மை போன்றே சிகிச்சை அளிக்க வேண்டும்.

இன்று உயிர் இனங்களால் தாக்கப்பெற்று மனிதன் உயிர் நீத்தலிலும் பார்க்க விவசாய இரசாயனப் பொருட்களின் உபயோகத்தால் பல உயிர்கள் உடல்விட்டுப் பிரிகின்றன. இந்நிகழ்ச்சிகளுக்கு இதனல் ஏற்படும் ஆபத்துகளுக்கு ஏன் சித்த - ஆயுர்வேத வைத்திய முறைகளைப் பயன்படுத்தலாகாது? விஷவைத்திய சிகிச்சைகளில் இப்படி ஒருகுறை இருக்குமேயானல் எமது வைத்தியமுறை முழுமைபெற முடியாதல்லவா? இப்படிப்பட்ட தீவிர நஞ்சுகளுக்கு, பூமத்தை வேரிலிருந்து படிக முறையாய்ப் பெறப்படும் உப்பை உபயோகித்துச் சிகிச்சை செய்யலாம் என்பது ஒரு அபிப்பிராயமாகும். இது எமது வைத்தியத்தில் ஆராய்ச்சிக்குரிய இடமாகும்.

3. ஜீவவிசம்: ஜீவசெந்துக்களால் உண்டாகும் விஷம் முன்னவைபோலல்லாது மனிதனின் வெளியுறுப்புக்களில் தாக்கப்பட்டு, [illegible] பல துன்பங்களையும், இறுதியில் மரணத்தையும் கூட ஏற்படுத்துவதாம், ஆதலினல் அத்தகைய விஷஜெந்துக்களின் பெயரும், சாதியும் (இனமும்) பிறப்பு விபரமும் வசிப்பிடமும், ஜீவிய வரலாறும், நஞ்சுறுப்புகளும், உட்செலுத்தும் நஞ்சின் அளவும், அதனல் உண்டாகும் உபத்திரவமும், குணம், குறிகளும், தீரும், தீரமாட்டாது எனஅறிதலும், தீர்க்கும் உபாயமும், பூரண சிகிச்சையும் முதலிய இன்னோரன்ன பலவும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

பூமத்தியரேகைப் பகுதிகளில், அதிகமாகவும், வடதென் பகுதிகளில் குறைவாகவும், பாலைவனங்கள் முதற்கொண்டு நீர் நிலைகள்வரை எல்லாவிடங்களிலும் பாம்புகள் காணப்படுகின்றன. வயல்கள், புதர்கள், செடி, கொடி, மரக்கிளைகள், பொந்துகள், புற்றுக்கள், காடுகள் முதலியனவற்றில் இவை பெரும்பாலும் வாழ்கின்றன. மிக உஷ்ணமுள்ள பகுதிகளில்வாழும் பாம்புகளிடையேதான் அதிக விஷம் காணப்படுகின்றது.

மனிதர்களுக்குரிய எல்லாப்புலன் உணர்ச்சிகளும், பாம்புகளுக்கும் உண்டு. சிலவற்றில் விசேஷ உணர்ச்சிகள்கூடக் காணப்படுகின்றமை பாம்புகள் யாவும் விஷம் உள்ளவை அல்ல. விஷம் உள்ளவை எண்ணிக்கையில் குறைவாகக் காணப்படினும் அவைகளின் தோற்றம், சீற்றம், வேகம் என்பவற்றை நேரில் காண்பவர்கள் மிகவும் பயம அடைகின்றனர். துன்பத்தை அடைகின்றனர்.

பாம்பின் விஷத்தைக் குடித்தால் அவ்விஷம் உடனே உடலைப் பாதிக்காது. ஆனல் வாயிலோ, குடலிலோ புண இருந்தால் மாத்திரம் அப் புண்ணின் மூலம் இரத்தச் சுற்றேட்டத்தை அடைந்து உடலைப் பாதிக்கும். நேரடியாக விஷம் சதையிலோ, இரத்த ஓட்டத்திலோ செலுத்தப்பட்டால் அவ் விஷ வேகம் மிகவும் கொடூரமாக இருக்கும. சில விஷங்கள் இரத்தத்தைப் பழுதடையச் செய்து உயிரையும் போக்கி விடும். இதனை ஹீமோ ரொக்ஸிக் (Hemo-toxic Poison) நஞ்சு என்பர். இதற்கு விரியன் பாம்புகளின் விஷம் உதாரணமாகும். சில பாம்புகளின் விஷம் நரம்பைத் தாக்கி அதன்மூலம சுவாசத்தைத் தடைப்படுத்தும். இதற்கு நியூரோ-ரொக்ஸிக் விஷம் (Neutro - toxic Poison) என்று பெயர் இதற்கு நாகபாம்பின் விஷம் உதாரணமாகும். சில விஷங்கள் இரத்த நுண் குழல்களை அவித்து (Hyalurodirase) இரத்தத்தை திசுக்களுக்கு அனுப்பிம்; இன்னும் சில விஷத் தன்மைகள் இரத்த உறைதலை உடைத்து கடிவாய் மூலம் இரத்தத்தைக் கூடுதலாகப் பாயச் செய்யும்,

உயிர் பாசிகள் எல்லாவற்றுக்கும் விஷம் காணப்படுவதில்லை. உயிரைக் கொல்லக் கூடிய தீவிர விடங்கள் பாம்புகளில் காணப்படுகின்றமை நாகபாம்புகள் தம்மிடமுள்ள அளவில்கூடிய விஷத்தைச் செலுத்துவதால் மாத்திரம் ஒருவன் உடனே மரணம் அடைய நேரிடுகின்றது. சிகிச்சைக்கு வசப்பட்டுத் தாழ்வானுனல் பின்பு மரணம் இல்லை; இவ் விஷம் நரம்பு வழியே சென்று மூளைந்தண்டு ஊறுய் பரவி உள் தாதுக்களை உயிர் அணுக்களை (Blood Cells) உடைத்து நீர்க்கச் செய்வன. ஆனல் புடையன், விரியனின் நஞ்சு வேகம், உடனேயும் கொல்லும் 7ஆம், 9ஆம் நாட்களிலும் கொல்லும். 21 ஆம் நாளின் பின்பும் கொல்லும், ஏன் மாதங்கள் பல சென்ற பின்பும் பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி போன்ற, குளிர்ந்த பதார்த்தங்களை உண்பதாலும் கொல்லும், இவைகளின் விஷம் உள் உறுப்புக்களை உதாரணமாகக் குண்டிக்காய் (Kidnies) போன்றவற்றைத் தாக்கி மனிதனை வருத்தும், மேலும் சுருட்டை, மண்டலி இவைகளின் நஞ்சும் கொல்லுந் தன்மையன. மற்றைய ஜீவராசிகளின் விடத்தால், பயம், பத்திய முறிவுகள் என்பவற்றால் மரணம் சம்பவிக்கலாம்.

( வளர்ச்சி 3-ஆம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ மருத்துவமும் பரிகரிப்பு முறைகளும்

( 2-ஆம் பக்கத்து வளர்ச்சி )

## சிகிச்சையில் பல் அடையாளங்கள்

**நாகங்கள்:** இவைகளுக்கு 4 விஷப்பற்கள் உள்ளன எனப் பல நூல்கள் கூறினும், கொடிய விஷம் உள்ள பற்கள் இரண்டு மட்டுமே உள்ளன என்று நாம் கருத்திற் கொள்ளவேண்டி உள்ளது பாம்பால் கடியுண்டவனது பல் அடையாளங்கள் புள்ளடி முக்கோணம், அங்குசம், வில் போன்றன வாம். இக்கடியல் உடன் மயக்கம் உண்டாகும். பாம்பின் பல் பட்ட உட்டுழை லம்பமாகக் காணப்படும், சப்த தாதுக்களிலும் விஷம் கலக்கும்.

**புடையன்:** நாயைப் போன்று வாயைக் கிழித்து ஆழமாகக் கடிப்பது. பல பற்களை உடையது. புலி போலச் சீறிப் பாய்ந்து கடிப்பது எனவே கடிவாய் கிழிந்து ஆழமாகக் காணப்படும். கடிவாயில் கடுப்பு கூடுதலாகக் காணப்படும். நோவும் காணப்படும். சில சமயம் துண்டுபடக் கிழிந்திருக்கும்.

**விரியன்:** வாயை அகலமாக விரித்துக் கடிப்பதால் கடிவாய் நன்கு கிழிந்து பல கோணங்களாகக் காயம் காணப்படும். கடிவாயில் எரிவு காணப்படும். தாங்க முடியாத கடுப்பும் நோவும் இருக்கும்.

**ஏனையவை:** ஊசி, முள்ளு முதலானவை தைத்ததுபோலக் காணப்படும். கடுப்பு, நோவு காணப்படும் சில சமயம் வீக்கமும் இருக்கும்.

நோய்களை மணி, மந்திர, ஒளஷதம் மூலம் சிகிச்சையளிக்கும் சித்த முறையாலும், பஸ்ப செந்தூர முறையால் சிகிச்சையளிக்கும் தேவமுறையாலும், மூலிகைகள் மூலமாகத் தீர்க்கும் மனித முறையாலும், எண்வகை அசுரமுறையாலும் நால்வகை நிலையில் பரிகரிக்கலாம்.

பொது வைத்திய சிகிச்சையில் சித்த, தேவ, மனித மருத்துவ முறைகளைப் படிப்படியே செய்து சுகப் காணுவிடின் மாத்திரமே அசுர சிகிச்சை செய்யவேண்டும் என்பது விதி. ஆனல் விஷ வைத்தியத்தில் அசுர வைத்திய முறைக்கே முதலிடம் அளிக்க வேண்டும். தீவிர மருந்துகளை ஆரம்பத்திலேயே உபயோகிக்க வேண்டும்.

விஷம் தீண்டிய ஒருவரை பரிகரிப்பிற்காக வைத்தியரிடம் கொண்டு வரும்போது எந்த மருந்தை முதலில் கொடுப்பது என ஆராய்வது அவசியமில்லை. ஏதாவது தகுந்த மருந்தை உடனே உபயோகிக்க வேண்டும். பொது வைத்திய அறிவும் சேர்ந்திருந்தால் சிகிச்சை செய்வதற்கு இலகுவாக இருக்கும். விஷ சிகிச்சையில் அநுபானமாக மனிதசலம் உபயோகிப்பது சிறந்தது முலைப்பால் பசும் பால் எதுவும் கிடை ாத நிலையில் வெந்நீரும் அநுபானமாகலாம்.

நாம் விஷ நூல்களில் படித்திருப்பது போல கடிவாய் மணம், தூதுவன் குறி போன்றனவற்றை ஆதாரமாகக் கொண்டு இக்காலத்தில் சிகிச்சை செய்ய இயலாது காணப்படுகின்றது. தற்பொழுது எவரும் முதலுதவி புரிந்த பின்னரே நோயாளியை வைத்தியரிடம் கொண்டு செல்வதால கடிவாயின் நிதானத்தைக் கொண்டு நோயை, கடிவாயின் அறிகுறியை அறிய முடியாது. தூதுவன் குறியும் சரிவர நிதானிக்க முடியாது போகின்றது.

நம்நாட்டு வழக்கப்படி மருந்துகள் வழங்கும் ஒவ்வொரு நோயாளிக்கும், மருந்துகள் வழங்கும்போது பத்தியபாகங்களும் குறிப்பிடுதல் கண்கூடு. மருந்துகள் சரிவரத் தொழிற்படுவதற்கு பத்திய பாக முறைகள் அவசியமாகும். இதனைக் கருத்திற் கொண்டு அகப் பத்தியம், புறப் பத்தியம் என்பன கூறப்படுகின்றன. சில விஷத்திஞல் தீண்டப்பெற்ற நோயாளிகள் 40 நாட்கள், 6 மாதங்கள் போன்ற நீடித்த தவணைகளுக்கும் புறப் பத்தியம் காக்கும்படி பணிக்கப்படுகிறுர்கள், இப்படிச் செய்வது மிக அவசியமே.

மருந்தை அருந்தியவுடன் சில நோயாளிகள் அம்மருந்தின் கசப்பு, அரோசகம் முதலியனவற்றைப் போக்க, கண்ட பொருட்களையும் வாயிலிட்டுச் சுவைப்பதுண்டு. இப்படிச் செய்வதால் மருந்தின் குணம் கெடும். அப்படி அவசியமாக உபயோகிக்க வேண்டுமெனின் பழைய நெற்பொரி அல்லது திராட்சை, போன்றனவற்றைச் சிறிதளவு வாயிலிட்டுச் சுவைக்கலாம். எம்மருந்தை யாருக்கு வழங்கினும் முதலில் சற்று சிறிது அளவில் ஆரம்பித்து குணம் காணப்படா விடத்து அளவைக் கூட்டிக் கொடுத்தல் குற்றமில்லையல்லவா?

பெண்களுக்கு முக்கியமாகக் கர்ப்ப ஸ்திரீகளுக்கும பாலர்களுக்கும் மிக்க கவனத்துடன் மருந்துகளை வழங்கவேண்டும். பெண்கள் கருவுற்று இருக்குப்போது கடும் விரேசன மருந்துகளையும் ருதுவை விருத்தி செய்யும் செய்கையுடைய மருந்துகளையும் வழங்கக்கூடாது. அபினி போன்ற சரக்குகள் சேர்ந்த மருந்துகளைப் பாலர்களுக்கு வழங்குதல் நன்றல்ல.

உடல் பெலத்திற்காக விஷ சிகிச்சையின் பின்பு கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, மதனப்பூ, புனுகு, தங்கம், வெள்ளி போன்றன சேர்ந்த சத்துள்ள மருந்துகளை நீடித்த உபபோகத்துக்காக வழங்கலாம். இதனை உபயோகிக்கும் நோயாளிக்குப் பத்தியம் கட்டாயப்படுத்தல் அவசியமில்லை. ஆனல் நோய்க்குரிய நேர் மருந்துகளை உபயோகிக்கும்போது பத்தியம் அவசியமாகும். அத்துடன் பால் ஊட்டும் தாய்மார் தங்கள் குழந்தைகட்கு மருந்கு வழங்கும் காலத்தில் பத்தியம் இருத்தல் அவசியமாகும்.

பாம்பு கடித்த ஒருவனுக்குப் பாம்பு தான் கடித்துவிட்டதெனவும், அவ்விஷம் கொடியது எனவும், மாற்றுதல் சங்கடமெனவும் நோயாளிக்குப் புலனுகும்படி கதைத்தல், தெரியப்படுத்தலால் நோயாளிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திச் சில சமயம் மரணத்தையும் ஏற்படுத்தலாம் ஆனல் தகுந்த வைத்தியர் நோயை நிதானித்து வைத்தியம் செய்ய முடியுமாஞல் துணிந்து "இது மாற்றக்கூடிய விஷம்; இது கொடியதல்ல" எனக் கூறுவதால் நோயாளியின் விஷ வேகம் எவ்வளவோ குறைவடைகின்றது. விஷ சிகிச்சையில் குறிப்பாக நோயாளியைப் பரிகரிப்பவன் பார்வையாளர்கள், வைத்தியன் என்போர் சாந்த குணமும், இன்முகமும் உடையவர்களாக இருத்தல் அவசியமாகும் விஷ சிகிச்சையில் நோயின் வேகம் தணிந்து நோயாளிக்குப் பசி, தாகம் ஆரம்ப நிலையில் உள்ளபோது. பால் முதல் ஆகாரமாக உபயோகிக்கலாம். பின்னர் படிப்படியாக உணவு ஜீரணமாகும் நிலையில் உள்ள நீராகாரங்களை உபயோகிக்க அனுமதிக்கலாம்.

பொது வைத்திய சிகிச்சையில் நோயாளிக்கு நித்திரை அவசியமாகும். ஆனல் விஷம் தீண்டிய ஒருவனுக்கு நித்திரை விழித்தல் மிக அவசியமாகும். விஷம் தீண்டிய ஒருவனுக்கு சிகிச்சை முறைகளைச் சரிவரச் செய்வதற்கும் விஷத்தின் தன்மையை நன்கு நிதானித்து ஏற்றவாறு சிகிச்சை அளிப்பதற்கும் நோயாளியை நித்திரை விழிக்கச் செய்வது அவசியமாகும். அவனைப் பரிகரிக்கும் பரிசாரகனும் நித்திரை விழித்தல் அவசியமானது.

விஷம் தீண்டப்பெற்ற ஒருவனுக்கு விஷத்தின் தன்மை பரவுமிடத்து அதன் வேகத்தைக் குறைக்க. விஷத்தின் தன்மையை அகற்ற வேது, நஸ்யம் கலிங்கம் குடேகரி முதலிய சிகிச்சைகளைச் செய்தல் வேண்டும், ஆனல் வமன சிகிச்சை விஷ வைத்தியத்தில் ஆகாது தாண்டு விஷத்தில் மாத்திரம் வமன சிகிச்சையை அவசியமேற்படின் நோயின் தன்மைக்கு இயையச் செய்யலாம்,

விஷத்தால் தீண்டப்பட்ட யாபேருக்கும் விரேசன ( பேதி ) சிகிச்சை செய்தல்வேண்டும் என்பது பொது விதியாகும். தேகதைரிய முள்ளவர்களுக்கு அகத்தியர்குழம்பு போன்ற பேதிவகைகளை உபயோகிக்கலாம். பெலவீனப்பட்டவர்களுக்கு சிவன் குளிகை போன்ற பேதியை ஏற்ற அநுமானத்தில் வழங்கலாம், விஷந் தீண்டிய கருப்பவதிகள் பாலர்களுக்கு அவரவர் தேகநிலைக்கேற்ப விஷத்தைநீக்க வாதாதி மாத்திரைபோன்ற குளிகைகளை பேதியாக்கக்கூடிய அனுமானத்தில் உபயோகிக்கலாம்.

உடம்பிலுள்ள ஜீவ அணுக்கள் விஷக் கிருமிகளுடன் போராடும் நிலை ஏற்படும் போது இரத்தம் கட்டியாகாது இரத்த ஓட்டத்தை நன்நிலையில் கவனிக்க அவைகளை உற்சாகப்படுத்தல் வேண்டும். இந்நிலையில் பேதி கொடுக்க இயலாது. இந்நேரத்தில் ஜீவசத்துக்கள் சேர்ந்த மருந்துகள் கொடுப்பது அவசியமாகும். (வளரும்)

# ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகார விளம்பரம்

**பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில்**

**வழக்கு இல: ஈடு 451**

பயிரமுத்து திருநாவுக்கரசு - வழக்காளி

எதிராக

கணபதிப்பிள்ளை கனகசபை கரணவாய் தெற்கு - எதிரி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கோமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1978-ஆம் ஆண்டு ஆடி மாதம் 20-ஆம் திகதி (20-7-1978) வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் குறித்த ஆதனத்துள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 1495-50 உம் மேலும் 900 வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டி வீசம் வழக்கு அணைந்த திகதியாகிய 1975ம் ஆண்டு மாசி மாதம் 17ம் திகதியில் இருந்து தீர்வைத் திகதியாகிய 1976ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுந் தொகைக்கும இறுக்கப்படுமவரை சட்ட வட்டியான வருடம் ஒன்றுக்கு, நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 2099.41 (இதில நடை பெற்ற செலவு ரூபா 180-59 நடைபெறவேண்டிய செலவு ரூபா 46-72 மேலதிக சமயாசமயச்செலவு ரூபா 71-82 கொடுக்கவேண்டி இருப்பதாலும்.

## ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோயில்பற்று

1ஃ கரணவாய் இளகாமக்குறிச்சியிறை நாவலடி நில பர 6. 5/8 இதில் தெற்கு புறமாக நில பர 3½ எல்லை கிழக்கு வல்லியப்பர் முருகேசுக்கும் மறு பெருக்கும் உடைய ஆதனமும், கைபொழுங்கையும், வடக்கு கணபதிப்பிள்ளை சுப்பருக்குடைய கழித்துவிடப்பட்ட பாகமும் பின்னற் காணும் 2ம் ஆதனமும் மேற்கு பொன்னம்பலம் கந்தையாபிள்ளைககும் மறுபெருக்குமுடைய ஆதனம், தெற்கு கணபதி சின்னவனுக்கும் மறுபெருக்குமுடைய ஆதனம், இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலி அடங்கலும்,

(2) மேற்குறித்த ஆதனம் நாவலடி நில பர 6 5/8 இதில் தெற்குப் புறமாக முதலாமாதனத்துக்காகக் கழித்து விடப்பட்ட நில பா 3, 1/4 நீக்கி மிகுதிக்கு நில பர 3 குழி 6, /4 இதில் கிழக்குப் புறமாக நில பர 3 1/4 நீக்கி மிகுதி மேற்குப் புறமாக குழி 2 /4 எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சுப்பருக்குடைய கழித்துவிடப்பட்ட பாகம், வடக்கு வெள்ள வாய்க்கால். மேற்கு பொன்னம்பலம் கந்தையாபிள்ளைக்கும் மறுபெருக்கும உடைய ஆதனம். தெற்கு மேற் குறித்த 1-ம் ஆதனம், இதன் அடங்கலிற் கொசியலாய் அவரவாசியும்.

**கா. முத்துக்குமாரு ஐயர்**

தங்கவேல் ஆலயம்,
சந்நிதி வேல.
பருத்தித்துறை, 17-5-78

நீதிமன்ற ஆணையாளரும்,
கொமிஷன் விலைமதிப்பாளரும்
123. 26-5-78

# ஈட்டு வழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வியாபாரிமூலை சு. பெ. முருகுப்பிள்ளை கனகசபாபதி

வழக்காளி

எதிராக

இலக்க ஈடு 13449

வல்வெட்டித்துறை மாரிமுத்து பாலசுப்பிரமணியம்

எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம 1978-ம வருடம் ஆனி மாதம் 9-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிற் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று. வல்வெட்டித்துறைக் குறிச்சியிலிறை "கரவத்தனைக்கலட்டி" நிபர 11,3/8 ஆகிய நிபர 8ஆகிய "திருவத்தம்பை" நி பர. 43½ இவைகளில் வடக்குப்புறமாக நி பர 50-ல் மேற்கரை வாசிக்கு நி பர. 25. இது 1946-ம் ஆண்டு வைகாசி மாதம் 10ந் திகதி உலாந்தா மேஸ்தர் வே. சீவரத்தினம் அவர்களால் 2710 ம் இலக்கத்தில் விகதாரிக்கப்பட்ட படத்தில 1ம். 2ம் துண்டுகள் விசாலம் நி பர. 27 குளி 6, 21/32 குறித்த படத்தில் 2ம் இலக்கத் துண்டுக்கு நி பர 15. இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை மயில்வாகனத்துக்கும் வேலுப்பிள்ளை வெங்கடாசலத்துக்குமுரிய வாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு சின்னபபிள்ளை குழந்தை வேலுவுக்கும மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு, வேலுப்பிள்ளை மயிலவாகனத்துக்கும் மறுபேருக்குமுரியவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம பனைகள், தென்னைகள், புதிதாய் வெட்டப்பட்ட கிணறு அடங்கலும் 1ம் இலக்கத் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

| | |
|---|---|
| துரட்சித்தொகை: . . . . | ரூபா 19,880-00 |
| இதில் ரூபா 14000/-க்கு 31-3-1976 தொடக்கம் 1-7-1976 வரை 5 வீத வட்டி ரூபா | ரூபா 420-00 |
| | ரூபா 20,300-00 |
| ரூபா 20,300/-க்கு 2-7-1976 தொடக்கம் 15-6-1978 வரை 5 வீத வட்டி | ரூபா 1945-00 |
| | 22,245-00 |

நீதிமன்றத்தால் ஏற்கப்பட்ட விலைப்பெறுமதி ரூபா 75000/-

**R. S. இராமநாதன் J. P**

"உமாபதி"
நெல்லண்டை ரோட்,
தும்பளை, 24-5-78

நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

ஒழுக்கம், அன்பு, அருள் ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை அழுக்கிலாத்துறவு, அடக்கம், அறிவொடு, அர்ச்சித்தல், ஆதி இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணி அறங்கள்.

Good conduct, love, compassion, purity, courtesy, friendliness, good temper, penance, charity, respect, reverence, truthfulness, renunciation, humility, discrimination, worship (of God) these are faultless virtues ordained by the Gracious Lord.

Hindu Organ

Friday, 26th May, 1978.

## IF RELIGION CANNOT SUCCEED!

The appeal of peace-loving people for harmony and goodwill is as strong as the strength of the temptation for terrorist activities. It appears that the world is at present divided into two large groups, not the Big Powers and the Rest, but the violent versus the non-violent.

Even the United Nations Organization acting as a World Commission will not be able to find out the full cause for the fratricidal tendencies that have just now crept into the human society, Universities too have failed to probe the problem at the level of learned research.

Cultural conferences and social seminars have not diagnosed this dangerous disease of brutishness in man.

The reason is not far to seek. There has not been the required religious accent on these flourishes of empty exhibitions.

Religion cannot fail to provide the remedy for human ills. It has never been found wanting in its responsibility. Only the people have ignominiously failed to make the proper use of Religion. This is evident from the recent developments in the affairs of the world. Two of the largest countries, Russia and China, have openly relegated religious thinking to the back yard. They have not stopped at that, but have spread their burning nets far and wide bringing into their orbit smaller units such as Cuba and Albania with the result that even the under-developed states of the vast continent of Africa have become induced to adopt the red line of approach.

That the ancient orthodox nation of Christendom - Italy with all its boasted Roman civilization - should have been reduced to the level of a cock-pit of cruel atrocities supplies the data for a search into the causes of this colossal chaos that is sweeping across the entire universe. Similarly with other countries where particular religions dominate the way of life

It may be that by an intriguing irony of fate humans have meandered away from their traditional beliefs and practices. Let this be treated as a trial and error method and new moves be made to reassemble religious thoughts and reinvigorate society.

The reputed Puranas and Ithikases tell us that Godliness can be achieved notwithstanding abnormal disasters

Let those of the Saiva Faith take the lead and get religion to work its magic! Let not even a single hour be lost in this laudable attempt, in this humanitarian campaign.

## HAND BOOK ON HOLY PLACES

The stately sub-continent of India has pride of place in the matter of Places of worship and Religious Institutions. Pilgrims to this land of of Temples gather adequate information about the several shrines from hand books published by religious societies such as Aatheenams.

But in our country such compilations are rare. Periodically particulars of the ancient history of time-hallowed Temples appear in newspapers and magazines Except for such piece-meal accounts of well-known places of worship, no book carrying an exhaustive history of shins and other holy places has been so far attempted.

The value of historical records, particularly in the sphere of language and religion is being seriously felt of as this type of literary pursuit has not been followed in the past in a perfect manner Thus it becomes compellingly necessary that records of religious and educational institutions should be compiled and maintained for the use of posterity.

We, therefore, suggest to established Saiva Sabhai to move in this matter by organizing a Research Centre for Religious Affairs.

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்**
**வழக்கு இலக்கம் ஈ9 / 1265/**

1. ஆறுமுகம் கந்தையா
2. பெண் வாமநாயகி புலோலி மேற்கு பருத்தித்துறை

வழக்காளிகள்

எதிராக

இறந்தவர் 1. கணபதிப்பிள்ளை தம்பிராசா கணபதிப்பிள்ளை
2. கணபதிப்பிள்ளை கைம்பெண் பரமேஸ்வரி தன் வகைக்காகவும் இறந்துபோன 1-ம் எதிராளியின் ஆதனத்தின் பிரதிநிதி என்ற வகையிலும், ஆத்தியடி, புலோலி மேற்கு பருத்தித்துறை

எதிராளிகள்

**மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியுமெனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப் படியுமிதன்கீழ் விபரிக்கப் பட்டிருக்கு மாதனத்தை 1978-ம் ஆண்டு ஆடிமாதம் 1-ந் திகதி (1-7-1978) சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.**

**ஆதனத்தின் மதிக்கப்பட்ட நிலை ரூபா 20 550/-**

**ஆதன இடாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று புலோலி மேற்கு வென்றிபாத தேவன குறிச்சி கோணனதோட்டம் நி பர. 9½. இதில் ஆட்சிப்படி இதில் நிகதமான நி பர. 5½ எல்லை கிழக்கு சணமுகம்பிள்ளை கைம்பெண் கமலாசினிக்குடைய வாதனம. வடக்கு கனகசபை பெண் நாகரத்தினதுக்குடைய வாதனம. மேற்கு ஒழுங்கை, தெற்கு இராமசாமி கணபதிப்பிள்ளைக்கும் அவரின சகோதரன் சிதம்பரப் பிள்ளைக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகளடங்கலும,

மேற்குறித்த எதிராளி குறித்த 2ம் வழக்காளிக்கு ரூபா 5700 க்கும் மேலும ரூபா 3000/-க்கு வருடமொன்றுக்கு, 10 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976ம் ஆண்டு ஆனி மாதம் 21ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம ஆண்டு கார்த்திகை மாதம 12-ம் திகதி வரையுமான வட்டியும அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும். (வழக்குச் செலவு கணக்கிடப்பட வில்லை.) கொடுக்க வேண்டியிருந்தாலும் அதன்பின் 1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20-ந் திகதியனறு ரூபா 2000/- எதிராளியால் கட்டப்பட்டதாலும் எனவே குறித்த ரூபா 2000/- ஐயும இத்தொகைக்குக் குறித்த திகதியிலிருந்து விற்பனவுத் திகதிக்குரிய 9% வட்டியையும கழித்து மிகுதிப பணம் யாவும் எதிராளி கொடுக்கவேண்டி யிருந்தாலும் மேலும் ரூபா 1600/-க்கு தீர்வைத் தொகையிலும் செலவில் ரூபா 100/-ம் 1968-1-11 ல் வழக்காளிக்குக கொடுபட்டது இத்தொகைகளையும் இத்தொகைகளுக்கு கட்டிய காலத்திலிருந்து கூடிய வட்டியையும கழிக்கப்படும. மிகுதி எதிராளி கொடுக்கவேண்டியிருக்கிறது.

**க. நா. சுப்பிரமணியம்**
**கொமிஷனரும்**
**விலைமதிப்பாளரும்**

புலோலி மேற்கு,
புலோலி,
18-5-78.

121 26-5-78

**வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன் கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.**

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, May 26, 1978.
EDITOR-IN-CHIEF: R. N. SIVAPIRAKASAM

**வே. தா. சிவபுண்ணிய சிவகுருநாதன்**

தோற்றம்: மேலைப் புலோலி, பருத்தித்துறை 7-2-189

மறைவு; அரசமருத்துவமனை யாழ்ப்பாணம், 21-5-1978

காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக்கணவர். ஆரம்ப ஆசிரியர்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 25 ஆண்டுகள் தலைமை ஆசிரியர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு விவேகானந்த சபை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மேலைப்புலோலி சைவவித்தியா தருமநிதி, யாழ்ப்பாணம், ஐக்கிய வியாபாரச் சங்கம், நெருங்கிய தொடர்பு கொண்டு வளர்த்தவை. கருத்தூன்றித் தொகுத்த சிவானந்த நித்திய தோத்திரக் கோவை, Raja's Picture Lessons in English 4 பகுதி இவர்களின் அறிவாற்றலுக்கு சிறு சான்றுகள்.

சி. நா. சொக்கநாதபிள்ளை
25-5-1978

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்**
**M B, 11863**

1. கணபதிப்பிள்ளை கைம்பெண் அன்னம்மா 2. கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி பராலமற்றவர்கள் 3 கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் 4: கணபதிப்பிள்ளை ராசலிங்கம் 5. கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம் 6. கணபதிப்பிள்ளை செல்வநாயகம் எல்லோரும் கட்டுவன்,

மூன்றிலிருந்து ஆறுவதுவரையுள்ளவர்க்காக முதலாம் எதிரி பிரதிநிதி,

வழக்காளி,

எதிராக

எதிராளிகள்,

முருகர் வையிரமுத்து கைம்பெண் லக்சுமி நாச்சிமார்கோவிலடி கட்டுவன் தனக்காகவும் இறந்த கணவன் வைரமுத்துவின் சொத்துக்களின் உரிய பிரதிநிதியாகவும், - எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் M B 11863 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு (யூன்) ஆனி மாதம் 13-ஆந் திகதி (13-6-78) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1051-50 பின் 10-7-70 தொடக்கம் 1-2-72 வரைக்கும் ரூபா 700/-க்கு 0 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகையும் இறுபடும வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 325-15 இதில் 750 ரூ கொடுக்கப்பட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று கட்டுவன் இறை வாரி குட்டியார் வளவு நிலப்பரப்பு 4 பனை மரம் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு காலிப் பாதை, வடக்கு வேலன் மூத்தவுக்கும் பெண் தெய்விக்குமுரிய ஆதனம், மேற்கு விரசா பெண் றெம்விக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாக 7/16 பங்கும் அதைச்சேர்ந்தவையும்.

சி. செ. மாரிமுத்து
விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்,

விதானை வளவு,
சித்தங்கேணி, 28-4-78.

125. 26-5-78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org